[9th November 1966

.,112 எக்கர் ஆயக்கட்டுக்குப் பாசன வசதி உறுதிப்படுத்தப்படும் என்பதுடன், 100 எக்கர் கூடுதலான பரப்பளவுக்குப் பாசன வசதி புதிதாக அளிக்கப்படும், இத்திட்டத்திறகாக ரூ. 158 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது. இதற்குத் திட்டக் கமிஷனின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டங்களைத் தவிர, ஹனுமநதி, கருப்ப நதித் திட்டங்களும் பரிசீலனையில உள்ளன.

நிறைவேற்றப்படுவதற்கு சாத்தியமாகவுள்ள திட்டங்களெல்லாம், திட்ட நிதி வசதி கிடைப்பதையொட்டி நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிட்டால், ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டில் வரும் உபரி நீரின் அளவு குறைந்துவிடக் கூடும். மேலும் சில ஆண்டுகளுக்கு நீர்மட்ட அளவினை ஊன்றிக் கவனித்த பிறகு, இன்னும் உபரி நீர் இருப்பதாகத் தெரியவந்தால் தகுந்த திட்டங்கள் வகுக்கப்படும்.

## APPENDIX VIII.

[*Vide* answer to starred question No. 561 at page 758]

Ordinarily dry lands, outside the registered ayacut of an irrigation source, are not entitled for the regular supply of water for irrigation and these dry lands are liable for levy of enhanced water-cess if they are irregularly irrigated with water from Government irrigation source. The lands referred to are dry lands and are not entitled to regular water-supply from the Manimuthar Reservoir Project. Under the Manimuthar Reservoir Project Irrigation Cess Rules, 1958, all dry lands irregularly irrigated will be penalised at the rate of Rs. 12·50 per acre in Tambaraparani delta area and Rs. 10 per acre in the non-delta area *according to occasions.* The usual rates of penalty for irregular irrigation is as follows :—

| | |
|---|---|
| First occasion .. .. | 3 times the normal water-cess. |
| Second occasion .. .. | 6 times the normal water-cess. |
| Third occasion .. .. | 12 times the normal water-cess. |
| Fourth occasion .. .. | 20 times the normal water-cess. |

However, the Government have ordered certain concessions in this regard. During kar, no penalty will be charged if the water had sufficed for the entire ayacut. The crop permitted will only be a short-term crop. During kar, the Collector will notify the extents to be given water every year but he shall ordinarily charge a single rate of water-cess only in respect of a land which has been successfully raising a wet crop with Tambaraparani water for five years.

During pishanam season, two rates of water-cess were levied for all cases of irregular irrigation of dry lands up to fasli 1369. From fasli 1370 onwards all new cases of irregular irrigation are penalised according to occasions. Such of those lands which are localised as percolation affected are being charged single rate of water-cess only.

9th November 1966]

The reason for the difference in the levy between kar and pishanam seasons is that though pishanam season is generally a plentiful season, yet the area to be given supply is very large when compared to kar and advance kar seasons. All the double crop and single crop wet lands will be given supply during this season. A long-term crop will be raised during this season in these lands. Experience has shown that the water is sufficient only for the registered ayacut. Hence, the existing system of levy of penalty for unauthorised irrigation in pishanam season has to be enforced strictly to curb extensive water rate cultivation.

Two representations were received from the M.L.A. of Tiruchendur Constituency in April 1964 and January 1965. His requests were examined by the Government. His request was not complied with as sufficient concessions had already been shown for advance kar and kar cultivation which are on a different footing from pishanam cultivation. Replies were given to him in Government letters, dated 23rd November 1964 and 14th October 1965.

சாதாரணமாக பாசன ஆதாரம் ஒன்றின் பதிவான ஆயக்கட்டின்கீழ் வராத புன்செய் நிலங்கள், முறையாகத் தொடர்ந்து பாசன வசதி பெற முடியாது. இப் புன்செய் நிலங்கள் அரசாங்கப் பாசன ஆதாரத்திலிருந்து முறையற்ற வகையில் பாசனம் பெற்றால், அவற்றிற்கு அதிகப்படி தண்ணீர்த் தீர்வை விதிக்கலாம். இக்கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்கள் புன்செய் நிலங்கள்; எனவே மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து அவை முறையான பாசனம் பெற முடியாது. 1958-ம் ஆண்டு மணிமுத்தாறு நீர்த்தேக்கத் திட்டப் பாசனத் தீர்வை விதிகளின்கீழ், முறையற்ற பாசனம் பெறும் புன்செய் நிலங்கள் அனைத்தும் தாம்பிரபரணி சங்கமுகப் பகுதியில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 12–50 வீதமும் சங்க முகமல்லாத பகுதிகளில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10 வீதமும், முறைக்கேற்ப, தண்டத்தீர்வை விதிக்கப்படும் முறையற்ற பாசனத்திற்காக, சாதாரணமாக விதிக்கப்படும் தண்டத் தீர்வை வீதங்களாவன :—

முதல்முறை : சாதாரணத் தண்ணீர்த் தீர்வையைப்போல மூன்று மடங்கு.

இரண்டாவது முறை : சாதாரணத் தண்ணீர்த் தீர்வையைப்போல ஆறு மடங்கு.

மூன்றாவது முறை : சாதாரணத் தண்ணீர்த் தீர்வையைப்போல 12 மடங்கு.

நான்காவது முறை : சாதாரணத் தண்ணீர்த் தீர்வையைப்போல 20 மடங்கு.

ஆயினும், அரசாங்கம் இது குறித்துச் சில சலுகைகளை வழங்குமாறு ஆணையிட்டுள்ளது. கார் காலம் ஆயக்கட்டு முழுவதற்கும் தண்ணீர் போதுமானதாக இருந்தால், தண்டத் தீர்வை எதுவும் விதிக்கப்படமாட்டாது. குறுகிய காலப் பயிர்தான் சாகுபடி செய்ய அனுமதிக்கப்படும். கார் விளைச்சல் பருவத்தில், கலெக்டர் ஒவ்வொரு ஆண்டும் பாசன வசதி வழங்கப்படவேண்டிய பரப்பளவை அறிவிக்க வேண்டும். ஆனால், அவர், ஐந்து ஆண்டுகளுக்குத் தாம்பிரபரணியிலிருந்து பாசனம் பெற்று நன்செய் பயிர் நன்கு விளையும் நிலத்திற்கு மட்டுமே சாதாரணமாக ஒரு போக தண்ணீர்த் தீர்வை விதிக்கவேண்டும்.

[9th November 1966

சம்பாப் பருவத்தில் (பிசான காலத்தில்), 1369-ம் பசலி ஆண்டு வரை, முறையற்ற பாசனம் பெறும் புன்செய் நிலங்களுக்கெல்லாம் இரண்டு வீதங்களில் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட்டது 1370-ம் பசலி ஆண்டு முதற்கொண்டு, முறையற்ற பாசனம் பெறும் நிலங்களுக்கெல்லாம் முறையையொட்டித் தண்டத்தீர்வை விதிக்கப்படுகின்றது. நீர்க் கசிவினால் பாதிக்கப்படும் நிலங்கள் என்று வகை செய்யப்பட்டுள்ள நிலங்களுக்கு ஒரு போகத் தண்ணீர்த் தீர்வை மட்டும் விதிக்கப்படுகின்றது.

கார், சம்பா (பிசானம்) காலங்களில் வெவ்வேறு வீதங்களில் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுவதற்குக் காரணம் வருமாறு :—

சம்பா (பிசானம்) காலம் சாதாரணமாக, தண்ணீர் மிகுந்துள்ள காலமாக இருப்பினும், நீர் வழங்கப்பட வேண்டிய பகுதி, கார், முன் கார் விளைச்சல் பருவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அதிகமானதாகும். ஒருபோக இருபோக நிலங்கள் அனைத்திற்கும் இக்காலத்தில் நீர் வழங்கப் படும். இக்காலத்தில் இந்த நிலங்களில் நீண்ட காலப் பயிர் ஒன்றும் விளைவிக்கப்படும். பதிவு பெற்ற ஆயக்கட்டுக்கு மட்டும்தான் தண்ணீர் போதுமானதாக இருக்கும் என்பது நடைமுறையில் அறிந்த உண்மை. சம்பா (பிசானம்) காலத்தில் அதிகாரபூர்வமற்ற பாசனத்திற்காக தண்டத் தீர்வை விதிக்கும் தற்போதைய ஏற்பாடு, தண்ணீர்த் தீர்வைச் சாகுபடி பரவலாகச் செய்யப்படுவதைத் தடுப்பதற்காக, கண்டிப்பாகச் செயல் படுத்தப்படவேண்டும்.

திருச்செந்தூர் தொகுதி சட்டசபை உறுப்பினரிடமிருந்து 1964ம்-ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒன்றும், 1965-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒன்றும் ஆக இரண்டு முறையீடுகள் வந்தன. அவரது வேண்டுகோளை அரசாங்கம் பரிசீலித்தது. சம்பா (பிசானம்) விளைச்சலிலிருந்து வேறுபட்ட முன் கார், கார் விளைச்சலுக்குப் போதுமான சலுகைகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளபடியால் அவரது வேண்டுகோள் ஏற்கப்படவில்லை. இது குறித்து அரசாங்கத்திடமிருந்து 23-11-1964, 14-10-1965 ஆகிய தேதியுள்ள கடிதங்களில் அவருக்குப் பதில் அனுப்பப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## APPENDIX IX.

[*Vide* answer to starred question No. 563 at page 759.]

*Causes for the low level at Mettur.*

According to the Rules of Regulation for Mettur Reservoir the normal date of opening of the reservoir is 12th June, provided there is an effective storage of 20,000 M. cft. corresponding to a level of 53.37 feet on that date in the reservoir.

2. In 1965, the reservoir was opened for irrigation on the normal date, i.e., 12th June, as the level and effective storage were 55.10 feet and 21,157 M. cft. and with a view to bring inasmuch acreage as possible under the Kuruvai so as to be harvested before the onset of the North East Monsoon.